இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 19.09.2026

# லண்டனில் இருந்து என்ன கொண்டு வந்தார்?

**லண்டனில் இருந்து என்ன கொண்டு வந்தார் விஜய்? அவமானத்தைத்தான் கொண்டு வந்துள்ளார். விஜய்யின் லண்டன் பயணத்தில் நடந்தவைகளைப் பார்த்துத் திட்டித் தீர்த்துக் கொண்டு இருக்கிறார்கள் இளைய தலைமுறையினர். இதுவரை அவரை விமர்சித்தும், அவமானப்படுத்தும் வகையிலும் வீடியோ பதிவுகளைப் போட்டு வந்தது தமிழ்நாட்டு மக்கள்தான். லண்டன் பயணத்துக்குப் பிறகு வெளிநாடுவாழ் தமிழர்களும் அதைச் செய்யத் தொடங்கி இருக்கிறார்கள்.**

**‘தமிழ்நாட்டுக்கான தொழில் முதலீடுகளை ஈர்க்கச் செல்கிறேன்’ என்று சொல்லி விட்டு முதலமைச்சர் விஜய், அரசு முறைப்பயணமாக லண்டன் சென்றார். போனது நடிகர் அஜித்துக்காக மட்டும்தான் என்பதை அந்த நடிகரே சொல்லி விட்டார். ‘நான் அழைத்து வந்துள்ளார். கார் ரேஸ் போட்டியில் எங்களைப் பார்ப்பதற்காக நான் அழைத்து முதலமைச்சர் விஜய் வந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. மிக பிஸியான நேரத்திலும் கார் ரேஸைக் காண வந்த முதலமைச்சர் விஜய்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்’ என்று அஜித் சொல்லி இருக்கிறார்.**

**இன்னொன்றையும் அனைத்து ஊடகங்களும் அம்பலப்படுத்தி இருக்கின்றன. இது கார் ரேஸ் மட்டுமல்ல, சினிமா சூட்டிங் என்றும் சொல்லி இருக்கின்றன. “அஜித்தைப் பொறுத்தவரை அவருடைய கார் ரேஸ் தொடர்பான ஆவணப்படமான ‘கிளாடியேட்டர்ஸ்’ தீபாவளிக்கு ரிலீஸ் ஆகப் போகிறது. விஜய் தற்போது லண்டனில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தது போன்ற காட்சிகளை அந்த ஆவணப்படத்தில் சேர்க்க இருக்கிறார்” என்று ஜூனியர் விகடன் (20.9.2026) இதழ் எழுதி இருக்கிறது. லண்டன் போனதன் உண்மையான நோக்கம் இதுதான் என்பதையும் அனைத்து ஊடகங்களும் சொல்லி வருகின்றன. ஆவணப் படத்தில் நடிக்கச் சென்று விட்டு அதனை அரசுமுறைப் பயணமாக மாற்றி ஏமாற்றி இருக்கிறார் விஜய்.**

அங்கும் அதே நடிகையை வரவைத்து, அவரோடு வலம் வரும் காட்சிகளும் வீடியோக்களாக வெளியில் பரப்பப்பட்டு வருகிறது.

கார் ரேஸ், நடிகையுடன் லண்டன் பயணம் என்று செய்திகள் வெளியானது. இச்செய்திகள் மூலமாக அவமானம்தான் அதிகம் ஏற்படுகிறது என்பதை அறிந்ததும் அவசர அவசரமாக சில நிறுவனங்களை அழைத்து ‘போட்டோ ஷூட்’ நடத்தி இருக்கிறார் விஜய். இங்கிலாந்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 10 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும், 12 ஆயிரம் கோடி முதலீடு என்று பீடிகையுடன் இரண்டு புகைப்படங்கள் வெளியானது. தங்கி இருந்த ஹோட்டலில் ஒரு ஸ்கிரீனைக் கட்டி போட்டோ எடுத்து வெளியிட்டுள்ளார்கள்.

அந்த நிறுவனங்கள் தொழில் தொடங்குகிறதோ இல்லையோ, இங்கிலாந்து நிறுவனங்களாக இருந்திருக்க வேண்டாமா? அதுவும் இல்லை. இந்திய நிறுவனம், அதுவும் தமிழ்நாட்டில் தொழில் நடத்தி வரும் நிறுவனத்துடன் இங்கிலாந்தில் வைத்து ஒப்பந்தம் கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள்.

உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவைத் தலைமையகமாகக் கொண்ட மதர்சன் குழுமத்துக்கு தமிழ்நாட்டிலும் நிறுவனங்கள் இருக்கிறன. அவர்களுடன் ஒப்பந்தம் போடுவதற்கு லண்டனுக்கு எதற்காகச் செல்ல வேண்டும்? பல ஆண்டுகளாக தமிழ்நாட்டுடன் தொடர்புள்ள நிறுவனம் இது. அவர்களை எதற்காக இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும்?

அதே போல், ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ள வில்சன் பவர் நிறுவனம் கடந்த தி.மு.க. ஆட்சியிலேயே மின்மாற்றி உற்பத்தி ஆலை அமைப்பதற்கான ஒப்பந்தம் செய்து விட்டது. அதையே தான் திரும்பவும் அறிவித்துள்ளார்கள். இன்னொரு முறை கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள்.

ஏற்கனவே ‘தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு’ என்று சொல்லி சென்னையில் ஒரு கூத்தை அரங்கேற்றினார்கள். 1 லட்சம் கோடி முதலீடு வந்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் யார் முதலீடு செய்தது என்பதை இதுவரை சொல்லவில்லை. அந்த முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு ஊடகங்கள் அழைக்கப்படவில்லை. ரகசியமாக நடந்தது அந்த மாநாடு. முதலீடுகளை ஈர்ப்பதை சினிமா கிளைமாக்ஸ் எடுப்பதைப் போல ரகசியமாக ஏன் செய்ய வேண்டும்?

**விஜய்யை நம்பி யாராவது முதலீடு செய்ய வருவார்களா? வரமாட்டார்கள். அவர் ஆட்சிக்கு வந்தது முதல், தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிறுவனங்கள் அனைத்தும் ஆந்திராவுக்குச் சென்று விட்டன. கடந்த நான்கு மாதத்தில் ஆந்திராவுக்குச் சென்ற நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகம். பரந்தூர் விமான நிலையம் ரத்து செய்யப்பட்ட பிறகு, தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது அப்படியே முடங்கிவிட்டது. விஜயை சுற்றி இருக்கும் ‘ஆந்திரா லாபி’ மிகச் சரியாக வேலை பார்க்கிறது. இந்த நிலையில் இனி தமிழ்நாட்டுக்கு எந்த வளர்ச்சியும் வராது. புதிய நிறுவனங்களும் வராது. இதை மறைக்க நாடகம் ஆடி வருகிறார் விஜய்.**

**கார் ரேஸுக்காகச் செல்கிறேன் என்றால் சொந்தக் காசு செலவு செய்ய வேண்டும். அரசாங்க காசை எடுக்க வேண்டுமானால் ‘தொழில் முதலீடு ஒப்பந்தம்’ நடந்ததாக ஒரு போட்டோ தேவை. அதற்காக இவை செய்யப்பட்டுள்ளன. அப்பட்டமான, அசிங்கமான மோசடியை பச்சையாகச் செய்துள்ளார் முதலமைச்சர் விஜய். தான் எது செய்தாலும் மக்கள் நம்புவார்கள் என்று நினைக்கிறார். அதனால்தான் துணிச்சலாக அசிங்கங்களை அரங்கேற்றுகிறார்.**

**சென்றது நடிகருக்காக. சென்றது நடிகையுடன். இதற்காக செலவு செய்யப்பட்டது தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணம். ஊரான் வீட்டு நெய்யில் தனக்கு ஸ்வீட்.**

**அசிங்கப்படுவது விஜய் மட்டுமல்ல, தமிழ்நாடும்தான்.**

## பிழையான சாதிவாரிக் கணக்கெடுப்பு முறையைத் திருத்துக;

# பிற்படுத்தப்பட்டோரின் சமூக நீதி உரிமைகளை உறுதி செய்வீர்!

## ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு - டி.ஆர்.பாலு எம்.பி. கடிதம்!

**புதுடெல்லி, செப்.19-**

**“பிழையான சாதிவாரி கணக்கெடுப்பு முறையை திருத்துக; பிற்படுத்தப்பட்டோரின் சமூக நீதி உரிமைகளை உறுதி செய்க” என்று உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு டி.ஆர்.பாலு எம்.பி. எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

பல்வேறு காரணங்களைக் காட்டி கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தள்ளி வைக்கப்பட்டிருந்த நாடு தழுவிய இந்திய மக்கள் தொகை பொதுக் கணக்கெடுப்பை அண்மையில் ஒன்றிய அரசு துவக்கி உள்ளது. இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ள இந்தப் பணியின் முதல் பகுதி சிலநாட்கள் முன் நிறைவடைந்தது. இரண்டாம் கட்டப் பணியில், ஏனைய பல்வேறு விவரங்களுடன் மக்களின் சாதிக் கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் உரத்த குரலில் தொடர்ந்து பல ஆண்டுகள் கோரிக்கை வந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் ஒன்றிய அரசு பின்பற்ற திட்டமிட்டுள்ள சாதிவாரி கணக்கெடுப்பு வழிமுறை, இதர பின் தங்கிய, மிகவும் பின்தங்கிய மக்களின் உண்மையான எண்ணிக்கையையும் சமூகப் பொருளாதார நிலையையும் உள்ளது உள்ளபடி பிரதிபலிக்கும் வகையில் இல்லாதது குறித்து திமுக உள்ளிட்ட பலரும் தங்களது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். எனவே, இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை பிழைகள் இன்றி செய்திட வேண்டும் என வலியுறுத்தி ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களுக்கு தி.மு.க. மக்களவைக் குழுத்தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள் விரிவான கோரிக்கை கடிதம் ஒன்றை நேற்று (18.09.2026) எழுதி உள்ளார்.

டி.ஆர்.பாலுவின் கடித விவரம் வருமாறு :-

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 ன் அடுத்த பகுதியாக மேற்கொள்ளப் படும் சாதிவாரிப் பதிவு தொடர்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

### திராவிட இயக்கமே சமூக நீதியின் முன்னோடி!

சமூகநீதியை முன்னெடுத்துச் செல்ல முழுமையான சாதிவாரி கணக்கெடுப்பு அவசியமானது என்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் இடையறாமல் பலகாலம் வலியுறுத்தி வந்துள்ளது. சமூகநீதிக் கொள்கையைப் பொறுத்தவரை தி.மு.க. தான் முன்னோடி இயக்கம் ஆகும். நீதிக் கட்சியின் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முன்னெடுப்புகள் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகிய ஒப்பற்ற தலைவர்களின் ஒரு நூற்றாண்டு காலத் தொடர் போராட்டம் இதற்கு சான்றாகும். இதன் பாரம்பரிய உரிமைப் பயனாக விளைந்தது தான் இன்று தமிழ்நாடு மக்கள் அனுபவித்து வரும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு.

### சாதிவாரி கணக்கெடுப்பின் பிழையான வழிமுறை!

இந்நிலையில், ஒன்றிய அரசு சாதிவாரி கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களை கண்டறிய வகுக்கப் பட்டுள்ள வழிமுறை பொத்தாம் பொதுவானதாக (open ended) உள்ளதும், ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள சாதிப் பட்டியல் இருந்து தங்கள் சாதியை அடையாளப்படுத்தும் விதமாக இல்லாததும் கவலையளிப்பதாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



பொத்தாம் பொதுவான அணுகு முறையில் (open ended approach) நடத்தப் பட்ட 2011 சாதிக் கணக்கெடுப்பு அனுபவம் எந்த அளவுக்கு குளறுபடிகளை ஏற்படுத்தும் என்பதை உணர்த்திவிட்டது. உதாரணமாக, 1931 கணக்கெடுப்பு படி 4147 சாதிகள் மட்டுமே கண்டறியப்பட்ட நிலையில், 2011 கணக்கெடுப்பு 46.70 லட்சம் சாதிகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. மக்கள் தாமாக சாதிவிபரத்தை தெரிவிக்கையில் அனைத்து சாதிகளிலும் உள்ள பிரிவுகள், உட்பிரிவுகள், சாதிப்பெயர்களின் திரிபுகள் மற்றும் வேறுபாடுகள் உருவாகி இதுபோன்ற உண்மைக்கு மாறான, நம்பகத் தன்மை இல்லாத புள்ளி விவரங்கள் கிடைப்பது சாதிவாரி கணக்கெடுப்பின் நோக்கத்தையே பாழாக்கும் அபாயம் உள்ளது.

எனவே, இதரபிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை, கல்வி மற்றும் பொருளாதார நிலையை மிகச் சரியாக உள்ளது உள்ளபடி கண்டறிவதே சாதிவாரி கணக்கெடுப்பின் நோக்கமாக இருக்க வேண்டும். அதன் அடிப்படையில், அரசுகள் பின் தங்கிய மக்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் நலத் திட்டங்கள் சார்ந்த கொள்கைகளை வடிவமைத்திட இயலும். எனவே, சாதிவாரி புள்ளிவிவரங்கள் துல்லியமான, முன்மாதிரியான (standardized) பயன்படக்கூடிய வகையில் எடுக்கப்படுவது கட்டாயமானது.

### சமூக நீதியை உறுதி செய்க!

எனவே, தமிழ் நாடு மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, மாநில அரசுகளுடனும் கலந்துரையாடி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையை மத்திய அரசு சரியான முறையில் குளறுபடிகள் ஏதும் இல்லாமல் தொகுக்க வேண்டும் என எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார். இதை உறுதி செய்ய ஒன்றிய - மாநில அரசுகள் வசம் ஏற்கனவே உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சாதிப் பட்டியலின் துணையுடன் மக்கள் தம் சாதிகளைத் தெரிவிக்கும் முறை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு முரணான பொத்தாம் பொதுவான படிவத்தை கைவிட வேண்டும்.

எனவே, இந்த பிரச்சினையில் எங்கள் தலைவரின் அக்கறைகளையும் ஆலோசனைகளையும் ஏற்று 2027 கணக்கெடுப்பு முறையில் உரிய திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும் என தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் வேண்டிக் கொள்கிறேன். ஏற்கனவே ஒன்றிய - மாநில அரசுகள் வசம் உள்ள சாதிப் பட்டியலின் அடிப்படையில் எடுக்கப்படும் சாதிவாரி கணக்கெடுப்பு மட்டுமே குற்றம் குறைகள் இல்லாத புள்ளிவிவரங்களை தொகுக்கவும் பின் தங்கிய, வரலாற்று ரீதியாக ஒதுக்கி ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கான உரிய சமூக நீதியை உறுதி செய்ய உதவும்.

இவ்வாறு, உள் துறை அமைச்சர் அமித் ஷா அவர்களுக்கு எழுதிய தனது கடிதத்தில் டி.ஆர்.பாலு எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

# சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 3வது மொழியைத் திணிக்க அவசரம் ஏன்?

## உச்சநீதிமன்றம் கண்டனம்!

*புதுடெல்லி, செப். 19-*

*சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 6ஆம் வகுப்புக்கு மூன்றாவது மொழியை அவசரமாக கொண்டுவரும் திட்டத்தை கைவிட வேண்டும் என ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டிப்புடன் தெரிவித்துள்ளது.*

*சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் இந்தி, சம்ஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளை மூன்றாவது மொழியாக பயிற்றுவிக்கும் ஒன்றிய அரசின் திட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.*

*இந்த வழக்கு இன்று தலைமை நீதிபதி அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த ஆண்டு 6 ஆம் வகுப்புக்கு மூன்றாவது மொழியை அவசரமாக கொண்டுவரும் திட்டத்தை கைவிட வேண்டும். ஏன் அவசர அவசரமாக கொண்டுவருகிறீர்கள்.*

*இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். பின்னர் இது குறித்த முடிவினை ஒரு வாரத்தில் தெரிவிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணை 23ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.*

## இ.பரந்தாமன் தலைமை! தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்

# எழும்பூர் எம்.இ.தேவநிதி இல்ல மணவிழா வரவேற்பு!

## டி.ஆர்.பாலு – ஐ.பெரியசாமி – திருச்சி சிவா – ஆர்.எஸ்.பாரதி – தயாநிதிமாறன் – பி.கே.சேகர்பாபு வாழ்த்துரை!

*சென்னை, செப்.19-*

*தலைமைக் கழக சொற்பொழிவாளர் எழும்பூர் எம்.இ.தேவநிதி - டி.சந்தான லஷ்மி ஆகியோரின் புதல்வி டி.ரசிகாவிற்கும், கலைமகள் 4கே போட்டோ & வீடியோ எஸ்.டி.ரவிச்சந்திரன் - ஆர்.மஞ்சுளா ஆகியோரின் புதல்வர் ஆர்.ராஜராஜனுக்கும் மணவிழா வரவேற்பு நாளை (20.9.2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.30 மணியளவில் சென்னை புரசைவாக்கம், டவுட்டன், ரித்தர்டன் ரோடு, ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.*

*இம்மணவிழா வரவேற்பிற்கு வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமை வகிக்கிறார்.*



*தயாநிதி மாறன் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., மா.சுப்பிரமணியம், நே.சிற்றரசு, ஆர்.டி.சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, திருச்சி என்.சிவா, ஐ.பெரியசாமி, ஆர்.எஸ்.பாரதி, ஆ.ராசா, அன்பகம் கலை, ஆர்.கிரிராஜன், ஐ.பி.செந்தில் குமார், கோவி.செழியன், டி.கே.எஸ்.இளங்கோவன், தயாகம் கவி, பெரியகருப்பன், ஆவடி சா.மு.நாசர், பூச்சி முருகன், அ.வெற்றிஅழகன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஆஉூர் சானவாஸ், சுப.வீரபாண்டியன், வீ.அன்புராஜ், அ.அருள்மொழி, பிரின்ஸ் பெரியார், சே.மெ.மதிவதனி, தமிழன் பிரசன்னா, ஆர்.பத்பநாபன், நா.எழிலன், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், இறையன்பன் குத்தூஸ், மருது அழகுராஜ், பொன்.தனபால், ஈரோடு இறைவன், கோ.மணி, எஸ்.மணிமுடி, கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், ஆ.நிர்மலா தேவி, ஜி.தாமோதரன், சைதை சாதிக். ஐ.சி.எப். வ.முரளிதரன், இரா.கலைவேந்தன், செ. தமிழ்வேந்தன், வி.சுதாகர், ஜெ.கிருஷ்ணமூர்த்தி, வி.விஜயகுமார், வி.நாகராஜ், எழும்பூர் கோபி, சேப்பாக்கம் பிரபாகர், வே.உதயசூரியன், ஆலந்தூர் ஒப்பிலாமணி, பூங்காநகர், கண்ணன், எட்டையபுரம் தமிழ்பிரியன், வே.பா.ரோஷன், வே.பா.ரோஷித்,*

*மா.பா.அன்புதுரை, ந.ராமலிங்கம், ச.பரமசிவம், எஸ்.மதன்மோகன், எம்.சாமிசண்ணு, சொ.வேலு, எம்.ஆர்.டி.அப்துல் ரஹ்மான், வே.உமாகாந்த்,*

*சு.மனோகரன், எல்.சுந்தர்ராஜன், டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், எஸ்.சுரேஷ், பி.சிவக்குமார், எஸ்.அன்புசெல்வன்,*

*வே.முருகன், ஆ.நத்தியராஜ், து.களரிமுத்து, மா.காந்தி, ஐ.சி.எப். கலையரசன், டி.வி.வேலு, ப.ராணி, மு.கிருஷ்ணன், வி.மோகன், கோ.வடிவேலு, க.நந்தீஸ்வரன், கி.புஷ்பராஜ், ஏ.கே.ரபீக், சூளை நேரு, எஸ்.குபேரன், க.அன்பழகன், கே.அருள்தாஸ், ஏ.சாமுவேல், ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன், பா.கருணாநிதி, டேவிட் எம்.கிருஷ்ணமூர்த்தி, த.பொற்செழியன், கே.கே.ஜெகதீசன், பா.நாராயணன், ஜெ.சரவணன், ஜெ.விநாயகம், தா.பாபு சேகர், ஜி.துளசிங்கம், ஆர்.சிராஜ், எம்.ஜாவித், எஸ்.எபிநேசன், டி.அமுல் தேவி, எஸ்.கண்ணன், நேரு பிரபாகரன், ஏ.கவிதா, பி.சத்தியகலா, மகாலட்சுமி, ஆ.ஞானகுரு, பி.எஸ்.வைஷ்ணவி, ச.கோகோமகன், எம்.நடராஜன், டி.சந்திரசேகர், எஸ்.ஜெயகுமார், வி.கிருஷ்ணகுமார், ஆர்.உதயசங்கர், எஸ்.குப்புசாமி, டி.இளம்பரிதி, ராபர்ட் ஜான், ஒயிட்பீல்டு, முகைதீன், எம்.எம்.முகைதீன், மார்ட்டின், எம்.நாகராஜ், எஸ்.அருண், எஸ்.தாரிக், புரசை கே.மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*எழும்பூர் கோபிநாத் நன்றி கூறுகிறார்.*